# கைத்தொழில்

## பொதுவான செயலாற்றம்

உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீடுகளின் பெறுமதி முன்னைய ஆண்டின் 12 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 8 சதவீதத்தால் அதிகரித்தது. தனியார்துறைக் கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி 15 சத வீதத்தால் உயர்வடைந்த வேளையில் அரச துறைக் கைத்தொழில் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

1987 இல் கைத்தொழில் உற்பத்திகளின் குறைவான வளர்ச்சி வீதங்களுக்கு அரசதுறை உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். இவ் வீழ்ச்சியானது தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தினதும், ஏறக்குறைய பெற் ரோலிய உற்பத்தியினதும் உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவேயாகும். இனக்கலவரங்கள் பெருந்தொகையான அரசதுறைக் கைத்தொழிற் கூட்டுத்தாப னங்களின் உற்பத்திகளையும் விநியோகத்தையும் தொடர்ந்தும் பாதகமானளவுக் குப் பாதித்தன.

தனியார் துறையில், புடவையும் அணியும் ஆடைகளும், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இரசாயனங்களும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற் பத்திகளும் பெருமளவு அதிகரிப்புக்களை பதிவு செய்தன. புடவைகளினதும் அணியும் ஆடைகளினதும் வெளியீடுகளின் அதிகரிக்கும் போக்கு உயர் மட்டங் களைக் கொண்ட அனுமதிப்பங்குப் பயன்பாடுகளின் மூலம் உயர்வான கூட்டப்பட்ட பெறுமதியைக் கொண்ட விடயங்கள் சார்ந்த உற்பத்தியின் மூலம் பேணப்பட்டது. மொத்தக் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதியில் புடவைகளும் அணியும் ஆடைகளும் 65 சதவீதத்திற்கு வகைகூறி 1987 இல் சிஎஉ நியதிகளில் 9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

1987 இல் அரசானது புதியதொரு கைத்தொழில் அபிவிருத்தி உத்தியினை அறிவித்தது. அதன்படி அமைச்சர்களடங்கிய ஒரு கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது நாட்டின் எதிர்காலக் கைத்தொழிற் கொள்கைகள் பற்றித் தீர் மானிப்பதற்கென உருவாக்கப்பட்டது. தனியார்மயப்படுத்தல் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கெனச் சனாதிபதி ஆணைக்குழுவொன்றும் (அ) கொள்கை களை ஒழுங்குமுறைப்படுத்தல் (ஆ) ஏற்புடைய தொழில் முயற்சிகளை அடையாளம் காணுதல் (இ) மாற்றல் செய்முறைகளுக்கு வசதியேற்படுத்துதல் என்பவற்றின் பொருட்டு 1987 இல் ஏற்படுத்தப்பட்டது. தீர்வை விதிப்புக் கொள்கை உள்ளூர் கைத்தொழில்கள் பன்னாட்டு ரீதியில் போட்டியிடும் வகையில் தொடர்ந்தும் இயங்கியது.

## முதலீடு

1987 இல் கைத்தொழில் துறையில் முதலீட்டு வேகம் தொடர்ந்தும் காணப்பட்டது. உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுக்கள் முன்னைய ஆண்டின் 321 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 364 செயற்றிட்டங்களுக்கு ஒப்பு தலளித்தன. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் எதிர்நோக்கப்பட்ட மொத்த முதலீடு, ரூ. 5,300 இலட்சங்களுக்கு வகைகூறி 14,594 ஆட்களைக் கொண்ட உள்ளார்ந்த தொழில் நிலையினைக் கொண்டிருந்தது.

வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு *1987* இல், முன்னைய ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் அதே எண்ணிக்கையான *41* கைத் தொழிற் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இந்தச் செயற்றிட்டங்கள் ரூ. *1,900* இலட்சம் வெளிநாட்டுக் கூறினை உள்ளடக்கி மொத்தமாக ரூ. *6,720* இலட்சம் முதலீடுகளை எதிர்நோக்கியிருந்தன. இவற்றில் பத்துச் செயற்றிட்டங்கள் புடவைகள், அணியும் ஆடைகள் துறையில் காணப்பட்டன. மொத்த உள்ளார்ந்த வேலைவாய்ப்பு *5,037* ஆட்களௌன மதிப்பிடப்பட்டது.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு *1986* இல் ஒப்புதலளித்த *10* செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் *1987* இல் *31* செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலை வழங்கியது. இச் செயற்றிட்டங்களிலான மொத்த உள்ளார்ந்த முதலீடானது ரூ. *5,920* இலட்சம் வெளிநாட்டுக் கூறுகளை உள்ளடக்கி ரூ. *8,120* இலட்சமாக மதிப்பிடப்பட்டது. மொத்தத் தொழில்நிலை உருவாக்கம் *8,970* ஆட்களௌன மதிப்பிடப்பட்டது. *1987* இறுதியில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு *252* செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியது. அவற்றில் *138* செயற்றிட்டங்கள் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக் குழுவுடன் கைத்தொழில்களை நிறுவுவதற்கான உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளன.

**உற்பத்தி**

உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி *1986* இன் *12* சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் *1987* இல் *8* சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தனியார்துறையிலேயே உற்பத்தி வளர்ச்சிக்கு முழுக் கவனமும் செலுத்தப்பட்டது.

*1987* இல் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த துணைத் துறைகளாகப் புடவைகள், அணியும் ஆடைகளும் தோற்பொருட்களும் *(23* சதவீதம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் *(11* சதவீதம்), அடிப்படை உலோக உற்பத்திகள் *(11* சதவீதம்), உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் *(9* சதவீதம்), மரமும் மர உற்பத்திகளும் *(4* சதவீதம்), இரசாயன உற்பத்திகளும் உணவும் குடிவகைகளும், புகையிலை உற்பத்திகளும் (ஒவ்வொன்றும் *3* சதவீதம்), தாளும், தாள் உற்பத்திகளும் *(1.* சதவீதம்) என்பன விளங்கின.

ஏற்றுமதி மயப்படுத்தப்பட்ட புடவைகள், கைத்தொழில்களின் (முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும்) உற்பத்திகளில் காணப்பட்ட மெச்சத்தக்க அதிகரிப்புக்கள், புடவைகள் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் வகையின் முன்னேற்றமான முழுமையான செயல் விளைவிற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்கியுள்ளன. உணவு, குடிபானம், புகையிலை வகையில் தனியார் துறைக் கைத்தொழில்கள், புகையிலை, பால் உற்பத்திகள், குடிபானங்கள், சீனி, இனிப்புப் பண்டங்கள், விசுக்கோத்துக்கள், இறைச்சி உற்பத்திகள் போன்ற அதிக எண்ணிக்கையிலான உற்பத்திகளின் வெளியீடுகள் அதிகரிப்புகளைப் பதிவு செய்தன. மரமும், மர உற்பத்திகளினதும் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக தனியார் துறையில் இருந்தே கிடைத்தவேளையில் அரச துறையின் வெளியீடுகள் பெரும்பாலும் நிலையானதாகவே இருந்தன. தாள், தாள் உற்பத்திகளின் வெளியீடுகளில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்பு பெரும்பாலும் தேசிய தாள் கூட்டுத்தாபனத்தின் உயர்ந்தளவு உற்பத்தியின் விளைவால்

ஏற்பட்டதாகும். இரசாயனங்கள், பெற்ரோலியம், பிளாத்திக்கு உற்பத்திகள் வகையில் அதிகரித்த உற்பத்தி மட்டங்கள் தீந்தைகள், மருந்து உற்பத்திகள், பொலித்தீன், சவர்க்காரம், பற்பசை, கிருமிநாசினிகள், களைக் கொல்லிகள், இறப்பர் உற்பத்திகள், கிளிசரின், பிளாத்திக்கு உற்பத்திகள் போன்றவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார் துறைக் கைத்தொழில்களில் முக்கியமாகப் பதிவு செய்யப்பட்டன.

முக்கிய கூட்டுத்தாபனங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டு மட்டம் சிறிதளவால் உயர்வடைந்த வேளையில், இலங்கை ரயர் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டு மட்டம் கணிசமான அளவிற்கு வீழ்ச்சியடைந்தது. அரச அகழ்வு சுரங்கத் தொழில் அபிவிருத்திக் கூட்டுத்தாபனமும், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனமும், உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தி வகைகளின் உயர்வான வெளியீட்டு மட்டங்களுக்குப் பெரிதும் பொறுப்பாகவிருந்தன. தனியார்துறைக் கைத்தொழில்களும், சுவர் ஓடுகள் தயாரிப்பு, கல்நார்த் தகடுகள் மற்றும் சீமெந்து உற்பத்திகள் போன்றவற்றில் உயர்ந்த வெளியீட்டு மட்டங்களைப் பதிவு செய்தன. அடிப்படை உலோக உற்பத்தி வகையின் அதிகரித்த வெளியீடுகள் இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் உயர்மட்ட வெளியீடுகளிலிருந்து முழுமையாகக் கிடைத்தன. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துறையில் முன்னேற்றங்கள் பெரும்பாலும் தண்ணீர்ப் பம்புகள், மின் குமிழ், மின் அடுப்புக்கள், குளிர்சாதனப் பெட்டி, பொறிகளும் கருவிகளும் போன்றவற்றைத் தயாரிக்கும் தனியார் துறைக் கைத்தொழில்களின் அதிகரித்த வெளியீடுகளின் காரணமாக ஏற்பட்டதாகும்.

அட்டவணை 1.15


**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1983 — 1987**
**(நடைமுறை விலைகள்)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை .. | 6,998 | 8,623 | 10,497 | 12,129 | 12,962 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 5,136 | 7,565 | 9,505 | 12,088 | 15,428 |
| 3. மர, மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட) | 522 | 640 | 705 | 632 | 677 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் .. | 901 | 907 | 1,187 | 1,289 | 1,372 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் .. | 11,888 | 14,328 | 13,104 | 11,088 | 13,477 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்தது) .. | 1,468 | 1,829 | 1,854 | 2,053 | 2,156 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் .. | 302 | 199 | 123 | 281 | 307 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறியும் போக்குவரத்துக் கருவிகளும் .. | 1,129 | 1,456 | 1,592 | 1,757 | 2,006 |
| 9. வேறெங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் .. | 90 | 106 | 125 | 136 | 155 |
| மொத்தம் .. | 28,434 | 35,653 | 38,692 | 41,453 | 48,540 |

அ. தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி

அரச துறையின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




இலங்கை மத்திய வங்கி.

1987 இல் கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதியானது நடைமுறை நியதிகளில் 17 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. புடவைகளும் அணியும் ஆடைகளும் உற்பத்திகளின் பெறுமதி 28 சதவீதத்தாலும், இரசாயனங்கள், பெற்றோலிய உற்பத்திகள் 22 சதவீதத்தாலும் உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் 14 சதவீதத்தாலும், அடிப்படை உலோக உற்பத்திகள் 9 சதவீதத்தாலும், குடிபானங்களும் புகையிலை உற்பத்திகளும், மற்றும் மரமும் மர உற்பத்திகளும் ஆகிய ஒவ்வொன்றும் 7 சதவீதத்தினாலும், தாளும் தாள் உற்பத்திகளும் 6 சதவீதத்தாலும், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் 5 சதவீதத்தாலும் அதிகரித்தன.

**அரசதுறைக் கைத்தொழில்**

உண்மை நியதிகளில், அரசதுறைக் கைத்தொழில் வெளியீடுகள் முன்னைய ஆண்டின் 8 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 1987 ஆம் ஆண்டில் 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் என்பன மொத்த அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் 62 சதவீதத்திற்கு வகைகூறின. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி ஏறக்குறைய நிலையானதாகவே இருந்தமைக்கு அதன் தூய்மியானது பேணல் நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டிருந்தமையே முக்கிய காரணமாகும். தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்தவரையில் இனக்கலவரங்களினாலும், மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டமையினாலும் ஏற்பட்ட வேலை நேரங்களின் இழப்பின் காரணமாக வெளியீடுகளில் வீழ்ச்சி காணப்பட்டது.

அட்டவணை 1.16

**அரசதுறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண்**
**(1977=100)**

| வகை | 1985 | 1986 | 1987(அ) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை | 48.6 | 46.6 | 40.8 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 185.9 | 208.0 | 200.0 |
| 2.1 புடவைகள் | 249.9 | 279.0 | 271.4 |
| 3. மர, மர உற்பத்திகள் | 139.3 | 103.4 | 103.8 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 142.8 | 160.6 | 167.8 |
| 5. இரசாயன உற்பத்திகள் | 109.5 | 114.9 | 115.3 |
| 5.1 பெற்றோலிய உற்பத்திகள் | 109.1 | 115.3 | 115.9 |
| 5.2 ரயர் | 130.2 | 136.4 | 130.3 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 103.9 | 132.7 | 142.3 |
| 6.1 சீமெந்து | 105.2 | 154.4 | 171.3 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 40.5 | 64.1 | 71.1 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 101.8 | 136.8 | 98.8 |
| எல்லா வகைகளும் | 108.1 | 116.2 | 115.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த | 106.9 | 117.0 | 114.8 |

(அ) தற்காலிகமானவை. மூலம் : இலங்கை மத்திய வங்கி.

அரச கூட்டுத்தாபனங்களின் உற்பத்தி அளவில் கணிசமானளவு வேறுபாடுகள் காணப்பட்டன. வெளியீடுகளில் வீழ்ச்சிகளைப் பதிவு செய்த கூட்டுத்தாபனங்களாக இலங்கை சீனி (24 சதவீதம்), அரச வடிசாலை (21 சதவீதம்), பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம் (16 சதவீதம்), இலங்கை மட்பாண்டம் (7 சதவீதம்), இலங்கை ரயர் (4 சதவீதம்), தேசிய புடவை (3 சதவீதம்), இலங்கை தோல் உற்பத்திகள் (3 சதவீதம்), அரச வன்கலம் (32 சதவீதம்) ஆகியன விளங்கின.

நீண்ட வரட்சியும், கிழக்கு மாகாணத்தில் நிலவிய உள்நாட்டுக் குழப்பங்களும் சீனி உற்பத்திமீது பாதகமான விளைவுகளைக் கொண்டிருந்தன. மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாகத் தொழிலாளர்களின் வரவின்மை உயர்வானதாக விளங்கியமையும் திருத்தல், பேணல் நோக்கங்களுக்காக நீர்கொழும்பிலுள்ள இதன் தொழிற்சாலை ஏறத்தாழ $2\frac{1}{2}$ மாதங்களுக்கு மூடப்பட்டிருந்தமையும் காரணங்களாகும். அரச வன்கலக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடுகள் வீழ்ச்சியடைந்தமைக்கு 1987 இன் இறுதிப் பகுதியில் காலதாமதமான கப்பற்படுத்தலின் விளைவாக மூலப்பொருட்கள் கிடைப்பதில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாகும். சேகரிப்புப் பகுதிகளில் நிலவிய வரட்சி நிலைமையின் விளைவாக கள்ளின் நிரம்பலில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி காரணமாக வடிசாலைக் கூட்டுத்தாபனம் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விற்பனை பாதிப்படைந்தமையாலும் வடிசாலைக் கூட்டுத்தாபனம் உற்பத்தியினைக் குறைப்பதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டது. இலங்கை ரயர் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு சந்தைப்படுத்தல் பிரச்சினைகளால் வீழ்ச்சியடைந்தது.

இவ்வாண்டில் அதிகரித்த வெளியீடுகளைப் பதிவு செய்த கைத்தொழில் கூட்டுத்தாபனங்களாக எண்ணெய்க் கொழுப்பு (89 சதவீதம்), அரச அகழ்வு கனிப்பொருள் அபிவிருத்தி (34 சதவீதம்), அரச மரம் (19 சதவீதம்), இலங்கை சீமெந்து (11 சதவீதம்), தேசிய உப்பு (10 சதவீதம்), தேசிய தாள் (5 சதவீதம்), இலங்கை உருக்கு (11 சதவீதம்) ஆகிய கூட்டுத்தாபனங்களும் வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் தயாரிப்புக் கூட்டு நிலையமும் (18 சதவீதம்) விளங்கின.

இலங்கை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் காணப்பட்ட பெருமளவு அதிகரிப்பு தனியார்துறை நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட பதிலீடுகளின் விலைகள் அதிகரித்தமை காரணமாகக் குறிப்பாகக் கால்நடைத் தீனிகளில் ஏற்பட்ட அதிகரித்த கேள்வியினைப் பிரதிபலித்தது. மரக்கூட்டுத்தாபனத்தின் வெளியீடு இக் கூட்டுத்தாபனத்திற்குக் காட்டுத் திணைக்களத்தினால் கூடிய மரம் வெட்டும் பகுதிகள் வழங்கப்பட்டமையைப் பிரதிபலிக்கும் வகையில் 1987 இல் அதிகரித்துள்ளது. கிளிங்கர் கல் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்புச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் உயர்மட்ட வெளியீடுகளுக்கு உதவியது. ''கிறேப்'' இறப்பருக்குக் கிடைத்த உயர்ந்த விலைகளும் ''லேட்டெக்ஸ்'' சேகரிப்புக்குச் சாதகமான கால நிலைமைகளும் வரையறுக்கப்பட்ட அரச இறப்பர் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்த வெளியீட்டுக்குக் காரணங்களாகும்.

அட்டவணை 1.17

## கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1985—1987

ரூபா பத்து இலட்சம்

| கூட்டுத்தாபனங்கள்/முயற்சிகள் | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1936 | 1987 (அ) | 1985 | 1986 | 1987(அ) | 1985 | 1986 | 1987(அ) |
| 1. தேசிய பாற்சபை ... | 10.3 | 3.2 | 2.5 | 50.0 | 95.9 | — | 60.3 | 99.1 | 2.5 |
| 2. இலங்கை எண்ணெய், கொழுப்பு ... | 6.0 | — | — | — | 7.1 | — | 6.0 | 7.1 | — |
| 3. இலங்கை சீனி ... | 508.3 | 131.0 | 195.0 | — | 127.1 | 42.0 | 508.3 | 258.1 | 237.0 |
| 4. தேசிய புடவை ... | — | 42.0 | 42.0 | 30.4 | 29.1 | — | 30.4 | 71.1 | 42.0 |
| 5. தேசிய தாள் ... | — | — | — | 27.1 | 7.7 | 8.0 | 27.1 | 7.7 | 8.0 |
| 6. அரச வளமாக்கி தயாரிப்பு ... | — | — | — | 43.0 | 26.3 | — | 43.0 | 26.3 | — |
| 7, அரச அச்சகம் ... | 3.7 | — | — | — | — | — | 3.7 | — | — |
| 8. வரையறுக்கப்பட்ட இலங்கை ஒட்சிசன் ... | — | — | — | 7.6 | — | — | 7.6 | — | — |
| 9. தேசிய பொதியிடல் பொருட்கள் ... | — | — | — | — | 4.0 | — | — | 4.0 | — |
| மொத்தம் ... | 528.3 | 176.2 | 239.5 | 158.1 | 297.2 | 50.0 | 686.4 | 473.4 | 289.5 |

(அ) ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள்

மூலம்: திறைசேரி

இவ்வாண்டில் பெரும்பாலான கூட்டுத்தாபனங்களால் இலாபங்களைப் பெற முடிந்தது. 1987 இல் இலாபங்களைக் காட்டிய கூட்டுத்தாபனங்கள் அரச வடிசாலை (ரூ. 780 இலட்சம்), அரச மரம் (ரூ. 550 இலட்சம்), தேசிய தாள் (ரூ. 430 இலட்சம்), இலங்கை இறப்பர் (ரூ. 530 இலட்சம்), இலங்கை ஒட்சிசன் (ரூ. 140 இலட்சம்), கொழும்பு வாயு நீர் கூட்டு நிலையம் (ரூ. 430 இலட்சம்), இலங்கை சீமெந்து (ரூ. 1,380 இலட்சம்), இலங்கைக் கனிப்பொருள் மணல் (ரூ. 680 இலட்சம்), அரச அகழ்வு கனிப்பொருள் அபிவிருத்தி (ரூ. 210 இலட்சம்), இலங்கை உருக்கு (ரூ. 60 இலட்சம்) என்பனவாகும்.

மதிப்பீடுகளின்படி, இவ்வாண்டில் அரச துறை தொழில் முயற்சிகளுக்கான வரவு செலவுத்திட்ட மாற்றல்கள் ரூ. 2,900 இலட்சமாக விளங்கின. இதில் ரூ. 2,400 இலட்சம் (83 சதவீதம்) மூலதன மாற்றல்களாகவும் மிகுதி ரூ. 500 இலட்சம் (17 சதவீதம்) நடைமுறை மாற்றல்களாகவும் விளங்கின. 1987 இல் இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் ரூ. 2,370 இலட்சத்தினை அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கான மொத்த வரவு செலவுத்திட்ட மாற்றல்களில் 82 சதவீதத்தினைப் பெற்றது. 1987 இல் வரவு செலவுத்திட்ட மாற்றல்களைப் பெற்ற கூட்டுத்தாபனங்கள் தேசிய புடவை, தேசிய தாள், தேசிய பால் சபை (வரையறுக்கப்பட்ட ''மில்கோ'' எனத் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளது) என்பனவாகும். அண்மை ஆண்டுகளில் அரச கூட்டுத்தாபனங்களுக்கான அரச மாற்றல்களில் பெருமளவு வீழ்ச்சி காணப்பட்டு அரச வரவு செலவுத் திட்டத்தில் அரச கூட்டுத்தாபனத்தின் தங்கியிருத்தல் குறைவடைந்துள்ளதைத் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

**வலுவும் எரிபொருளும்**

இலங்கை மின்சபைக்கானவை நீங்கலாகக் கைத்தொழில் எரிபொருளின் விற்பனை 1987 இல் 21 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இவ்வாண்டில் உலை எண்ணெயின் விற்பனைகள் 25 சதவீதத்தால் அதிகரித்துள்ள வேளையில் பார டீசலுக்கானவை 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.18

**கைத்தொழிலில் வலு, எரிபொருள் என்பனவற்றின் பயன்பாடு 1985—1987**

| விடயம் | 1985 | 1986 | 1987 (அ) |
|---|---|---|---|
| 1. மின்வலு (கிகாவாட் மணித்தியாலங்கள்) ... ... | 850.4 | 925.3 | 879.0 |
| 1.1 சிறு கைத்தொழில் * ... ... | 34.7 | 35.6 | 38.7 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் * ... ... | 411.4 | 444.8 | 451.8 |
| 1.3 பெரிய கைத்தொழில் * ... ... | 404.3 | 444.9 | 388.5 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் (ஆ) ... | 163.2 | 149.5 | 180.3 |
| 2.1 பார டீசல் ... ... | 2.3 | 19.8 | 18.6 |
| 2.2 உலை எண்ணெய் ... ... | 142.9 | 129.7 | 161.7 |

மூலங்கள்: இலங்கை மின் சபை
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இலங்கை மின்சபைக்கான விற்பனைகள் நீங்கலாக.
* தயாரிப்பு, ஏற்றுமதிப் பதனிடல் கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறுகைத்தொழில் 50 கிலோ வாட்டுக்குக் குறைந்ததும், நடுத்தரக் கைத்தொழில் 50–500 கி. வாட்டையும் பெரும் கைத்தொழிலில் கி. வாட்டுக்கு மேற்பட்ட இயலளவினையும் கொண்ட கூறுகளாகும்.

1987 ஒகத்து—செத்தெம்பர் காலப்பகுதியில் இருந்த மின்வெட்டின் காரணமாகக் கைத்தொழிலில் மின் பாவனை 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. நடுத்தர, சிறு கைத்தொழில் வகைகளில் மின் பாவனை 1987 இல் முறையே 9 சதவீதத்தாலும், 2 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. எனினும், இவ்வாண்டில் பெரிய கைத்தொழில்களின் மின் பாவனை 13 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்

1987 இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு 31 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்து 1987 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கையை 252 ஆக உயர்த்தியது. இதில் 138 செயற்றிட்டங்கள் கைத்தொழில்களைத் தொடங்குவதற்குக் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. மொத்தம் 70 தொழில் முயற்சிகள் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள வேளை 21 தொழில் முயற்சிகள் கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு வெளியில் உற்பத்தியில் ஈடுபட்டன. இவ்வாண்டின் இறுதியில் பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் 5 தொழில் முயற்சிகள் வர்த்தக உற்பத்தியில் ஈறுபட்டன. தொழில்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களில் 41 செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்ட ஆடைகளும் அதனுடன் தொடர்புள்ள விடயங்களின் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் ஈடுபட்டுள்ளன.

1987 இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் மர முந்திரிகை, புகையிலை, பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றின் பதனிடல்; வைரங்கள், இரத்தினக் கற்கள் வெட்டுதலும், செய்முறையும்; மூடிகள், தொப்பிகள், ஆடைகள், துணிப் பைகள், மரம் செதுக்குதல், செயற்படு கரியம். தொழில்நுட்ப ரீதியில் பாகுபடுத்தப்பட்ட இறப்பர், தெளிவான அச்சுக்கள், ஈருருளிச் சட்டத்திற்கான பாகங்கள், மீன்பிடிப் பொறிகளும் கருவிகளும், துடைப்பங்களும் தூரிகைகளும், வானொலிக்கான பாகங்கள், கண்ணாடி வில்லைகள், பஞ்சு திணிக்கப்பட்ட மென் பொம்மைகள், ஒப்பனைப் பொருட்கள், வரைதல் தூரிகைகள், இலைவகைப் பூஞ்செடிகள், செயற்கை மலர்கள், தரவுச் செய்முறைத் தொகுதிகள், வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகள் பொருத்துதல், கம்பியுள்ள, கம்பியற்ற தொலைபேசிகள் போன்றவற்றின் உற்பத்திகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

1987 இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 77,310 இலட்சமாக (சிஎஉ 2,030 இலட்சம்) விளங்கின. இது 1986 இனைவிட ரூபா நியதிகளில் 43 சதவீதம் கூடியதாகும். இது சிஎஉ நியதியில் 22 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. முன்னைய ஆண்டினைப்போல ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 80 சதவீதம் புடவைகள், தயாரிக்கப்பட்ட ஆடைகளில் இருந்து கிடைத்தது.

**அட்டவணை 1.19**

## முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்-தொழில் வாய்ப்பும் ஏற்றுமதி வருவாய்களும் 1986—1987

| வகை | 1986 | | 1987 (அ) | |
|---|---|---|---|---|
| | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.எ.பெ.) ப.இ.ரூ. | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க. எ. பெ.) ப. இ.ரூ. |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 471 | 38.8 | 641 | 144.7 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 33,937 | 4,369.8 | 38,343 | 6,100.1 |
| 3. மர, மர உற்பத்திகளும் (தளபாடங்கள் உட்பட) ... | 24 | 1.3 | 56 | 4.0 |
| 4. இரசாயனம். பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 1,655 | 287.1 | 1,649 | 262.0 |
| 5. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) | 1,648 | 210.8 | 2,132 | 317.4 |
| 6. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும் போக்குவரத்து கருவிகளும்... | 149 | 79.7 | 435 | 176.7 |
| 7. வேறெங்கும் குறிப்பிடப்படாத பொருட்கள் | 3,237 | 199.7 | 3,683 | 444.8 |
| 8. பணிகள் (ஆ) ... | 493 | 208.5 | 534 | 281.8 |
| மொத்தம் ... | 41,614 | 5,395.7 | 47,473 | 7,731.5 |

மூலம்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு

(அ) தற்காலிகமானவை

(ஆ) வரையறுக்கப்பட்ட "எயர் லங்கா நீங்கலாக"